இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

O.S. No.38/2020

Date :10.02.2026

வா.சா. 1 – M. பலவேசம்

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் 01.07.2025 அன்று ஒரு நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்து 21.11.2025 அன்று திருத்தப்பட்டு நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் நான்சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களையும் படித்து பார்த்துதான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாசாஆ 1 முதல் 3 வரை உள்ள ஆவணங்களில் நல்லூர் கிராமம் ரி சர்வே எண் 305/33 ல் நான்கு சென்ட் உரிமைப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வாசாஆ 4 மற்றும் 5 ஆவணங்களில் ரி சர்வே எண் 305/33 ல் 3 ஏர் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4 சென்ட் எனது தந்தை காலத்திலிருந்தே இருக்கிறது. வாசாஆ 5 ல் 5 பேர் பெயர்கள் உள்ளன என்றால் சரிதான். எனது சொத்தை அளந்து திட்டப்படுத்த வருவாய் துறையில் மனு கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு அளந்து திட்டப்படுத்தினால் தான் எனக்கு எவ்வளவு சென்ட் என்று தெரியும் என்றால் சரிதான்.

வாசாஆ 6 ரி சர்வே எண் 579/1 ல் 0.02 ஏர் நான் ஆக்கிரமிப்பு படுத்தியதாகவும் , அதை அப்புறப்படுத்தவும் குறிப்பிட்டுள்ளது என்றால் குறிப்பிட்டுள்ளது ஆனால் ஆக்கிரமிப்பு செய்யவில்லை. வாசாஆ 6 ஆவணத்திற்கு பின்பு 1 ம் பிரதிக்கு நான் எவ்வித ஆட்சேபனையும் கொடுக்கவில்லை என்றால் வாய்மொழியாக கூறினோம்,

எழுத்துப்பூர்வமாக கொடுக்கவில்லை. ரி சர்வே எண் 579/1 ல் எனக்கும் எனது தந்தைக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான். ஆகையால் ரி சர்வே எண் 579/1 ல் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அதனை நீக்குவதற்கும் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்திலும் 5 இலட்ச ரூபாய் கட்டிடம் கட்டியதாக நான் குறிப்பிட்டுள்ளேன் அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்என்றால் வீட்டு வரி ரசீது ஆகும். மேற்படி வீட்டு வரி ரசீதில் 5 இலட்ச ரூபாய்க்கு கட்டிடம் கட்டியதாக குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. 5 இலட்ச ரூபாய் கட்டிடம் கட்டியதாக வேறு ஆவணம் தாக்கல் செய்யமுடியாது என்றால் சரிதான்.

வாசாஆ 7 ஆவணம் 4 இலட்ச ரூபாய் கட்டிடம் கட்டியதாக குறிப்பிட்டுள்ளது அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியாது. நான் தாக்கல் செய்த வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்திலும் வீட்டு கதவு எண் 10 ஏ(1) குறித்து எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்திலும் வீட்டு கதவு எண் ஏ(1) என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வீட்டு கதவு எண் 10 ஏ(1)மற்றும் வீட்டு கதவு எண் ஏ(1) குறித்து எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டு வரி ரசீது தாக்கல் செய்யதுள்ளேன். வாசாஆ 9 புகைப்படம் யார் எடுத்தார்கள் என்றால் ஸ்டுடியோவில் எடுத்தேன். எந்த ஸ்டுடியோ எங்கு உள்ளது என்றால் அகல் ஸ்டுடியோ ராஜாவூர் ல் எடுத்தேன். மேற்படி நபரை நீதிமன்றத்தில் அழைத்து விசாரிக்கலாமா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்கலாம்.

வாசாஆ 9 ல் வீட்டு கதவு எண் 10 ஏ(1)மற்றும் வீட்டு கதவு எண் ஏ(1) குறித்து எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

வாசாஆ 9 ஆவணம் இவ்வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ரி சர்வே எண் 579/1 ல் உள்ள வாய்க்காலை 1ம் பிரதி பராமரித்து வருகிறார் என்றால் அதுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. ரி சர்வே எண் 579/1 ல் உள்ள ஆக்கிரமிப்பு குறித்து 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் 06.09.2019 அன்று வருவாய் துறை ஆவணம் மூலம் சரியாக அளவீட்டு கண்டறிந்தார்கள் என்றால் அளந்தார்கள்.

மேற்படி அளவீடு மூலமாக நானும் ஜான் போஸ்கோ மனைவி பிரேமா ஆக்கிரமிப்பு செய்த கண்டறிந்து அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எனக்கு அறிவிப்பு வந்தது. பிரேமாவுக்கு அறிவிப்பு சென்றதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி அறிவிப்பின் அடிப்படையில் பிரேமா அவருடைய செலவில் ஆக்கிரமிப்பு அகற்றினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தமிழ்நாடு குளங்கள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு சட்டம் 2007 ன் படி நீர்நிலைகளில் நானும், எந்த ஒரு தனிநபரும் ஆக்கிரமிப்பு செய்ய இயலாது என்றால் சரிதான். 18.09.2019 அன்று ஆக்கிரமிப்பு சம்மந்தமாக படிவம் எண் 2 ம் 30.09.2019 ல் படிவம் எண் 3 ம் எனக்கும் பிரேமாவுக்கும் வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் ஆக்கிரமிப்பு எடுக்கவில்லை.

ரி சர்வே எண் 305/33 ல் மட்டும் தான் உரிமை உண்டு . ரி சர்வே எண் 579/1 ல் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்று சொன்னது பொய் என்றால் சரியல்ல. நீர்நிலைகளை நான் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் அதனை அகற்றுவதற்கு பிரதிவாதிகளுக்கு கடமை உண்டு நான் பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. வழக்கு பிரதிவாதிகளின் செலவுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.